DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.79/2025

**prosecution witness: LW–1 as PW–1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாரியம்மாள் | தொழில் | : மீன் வியாபாரம் |
| க/பெ. | : அர்ஜுன் | வயது | : 45 |
| ஊர் | : இராமேஸ்வரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>25.11.2025</u>

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் இராமேஸ்வரத்தில் குடியிருந்து கொண்டு மீன்வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மருமகன் ஆவார். சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு எனது மகளுக்கும், ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணம் எங்களது சம்மதமின்றி நடைபெற்றது. ஆஜர் எதிரி என்னையும், எனது மகளையும் தொந்தரவு டார்ச்சர் செய்தார். ஆஜர் எதிரி எனது பெண்ணை தொடர்ந்து டார்ச்சர் செய்தது சம்பந்தமாக துறைமுகம் காவல் நிலையத்தில் நான் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

கடலாடி காவல்நிலையத்தில் எனது மகளை எதிரியின் குடும்பத்தார் சுட்டு வைத்துவிட்டார்கள் என்று தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதே புகார் மனுவைத் தான் எனது கணவர் துறைமுகம் காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரிதான்.

எங்களது விருப்பம் இல்லாமல் எதிரி எனது மகளை காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். இதனால்தான் எனக்கும், எனது கணவருக்கும் ஆஜர் எதிரியை பிடிக்காமல் போய்விட்டது என்றால் சரிதான். தற்போது எனது மகளும், ஆஜர் எதிரியும் சேர்ந்து தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது விருப்பம் இல்லாமல் தான் ஒரு எழுதாத

வெள்ளை பேப்பரில் எனது கணவர் கையொப்பம் வாங்கி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் தற்போது சாட்சி சொல்ல மட்டும் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள்.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2025.11.25 10:28:48 +0530

DEPOSITION OF THE WITNESS
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC.79/2025
**prosecution witness: LW-3 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வில்வமுனீஸ்வரன் | தொழில் | : | கொத்தனார் |
| த/பெ. | : | அர்ஜூனன் | வயது | : | 23 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>25.11.2025</u>
( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>முதல் விசாரணை :-</u>

நான் இராமேஸ்வரத்தில் குடியிருந்து கொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரி எனது மைத்துனர் ஆவார். சுமார் ஏழு வருடத்திற்கு முன்பு எனது அக்கா மாரீச்செல்வியை ஆஜர் எதிரி சூடு வைத்து சித்தரவதை செய்து அடித்து துன்புறுத்தினார். இது சம்பந்தமாக நானும் எனது தாயாரும் துறைமுக காவல் நிலையத்தில புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரியாகிய எனது மச்சானும் எனது அக்காவும் காதல் திருமணம் செய்து வீட்டிலிருந்து ஓடிவந்தார்கள். அதனால் எனது குடும்பத்திற்கு மச்சான் மீது பிடிக்காமல் போய்விட்டது என்றால் எனது மச்சானுக்கும் எனது அக்காவிற்கும்தான் பிடிக்காமல் போய்விட்டது. எனது அக்காவும் எனது மச்சானும் ஒன்றாக சேர்ந்துதான் வாழ்ந்து வருகிறார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை தனியாக விசாரிக்கவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.11.25 10:28:53 +0530